

# நல்லை நாற்பது

வித்துவான்
சி. கார்த்திகேசு

உ
சிவமயம்
ஓம் முருகா

**சி. கார்த்திகேசு**
(சேந்தன்)
*பாடிய*

# நல்லை நாற்பது

## பக்திக் கீர்த்தனைப் பாடல்கள்

ஸ்ரீபவ வருஷம்
1994

# நல்லை நாற்பது

(பக்திக் கீர்த்தனைப் பாடல்கள்)

முதற்பதிப்பு

**1994 ஜுலை**

வெளியீடு

சிவபுண்ணியச் செம்மல்

**க. ஆறுமுகம்**

**தனிப்பிரதி விலை**

**ரூபா 35/=**

விற்பனைத் தொகை முழுவதும்

நல்லூர்க்கந்தனுக்கு காணிக்கையாக்கப்பெறும்.

கணனி அச்சமைப்பு

**லக்ஷ்மீஹர**

309, செட்டியார்தெரு, கொழும்பு 11

தொலைபேசி இல. 336474

உ
முருகா

# சமர்ப்பணம்

சைவ உலகம்
பெருமைப்படத்தக்க வகையில்
நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின்
நித்திய நைமித்திய கிரியைகளை நேரந் தவறாது
நிர்வகிக்கும் அறங்காவலர்

**குகத்திரு குமரதாஸ் மாப்பாண முதலியார்**

அவர்களுக்கு

உ
முருகா

# வாழ்த்துரை

**நாடெங்கும் ஒலித்திடுக**

நல்லைநகர் கந்தவேள் கோயில் நாடி
நாளும் அன்பால் நெக்குருகிக் கண்ணீர் வார
தொல்லையிரும் பிறவிதரு துயரந் தீர
சொன்மாலை பண்ணோடு தொடுத்தான் சேந்தன்
'நல்லைநாற்பது' என்னும் இசைப்பா ஈழ
நாடெங்கும் ஒலித்திடுக பக்தர் பாட
வல்லதமிழ்க் கீர்த்தனைகள் வாழி என்றே
வாயார வாழ்த்துகிறேன்; புலவன் வாழி.

**இணுவில்**
1994. 06. 28

**கவிமாமணி, யாழ்ப்பாணம்**
ந. வீரமணி ஐயர்

உ

முருகா

# அணிந்துரை

ஈழம் முருக வழிபாட்டுக்குப் பெயர் பெற்றது. தெற்கே கதிர்காமம், கிழக்கே மண்டூர், வெருகல். வடக்கே மாவிட்டபுரம், செல்வச் சந்நிதி, நல்லூர் என எங்கணும் கலியுக வரதனாம் கந்தனுடைய அருளாட்சி.

நல்லூரை நாடாத அடியவர்கள் இல்லை; நல்லூர் முருகனைப் பாடாத புலவர்கள் இல்லை. நான்மணிமாலை என்றும், வெண்பா என்றும், திருப்புகழ் என்றும், காவடிச்சிந்து என்றும் நம் கவிஞர்கள் ஆரா அன்போடு பாடியுள்ளார்கள்; பரவியுள்ளார்கள்.

அந்த வரிசையில் ''சேந்தன்'' (பண்டிதர் சி. கார்த்திகேசு) அவர்கள் நல்லூர் முருகன் மீது 'நல்லை நாற்பது' பாடியுள்ளார். இப்பானுவல், இசைப்பாக்களால் ஆனது. இசைநலங் கனிந்த இக்கீர்த்தனைகள் மேடைகளிலும் கூட்டு வழிபாட்டிலும் வாய் விட்டுப் பாட உகந்தவை.

நமது இசைவாணர்களுக்குப் புதிய உருப்படிகள் கிடைப்பதில்லை. தவறு அவர்களுடையது அல்ல. இசைப் பாக்களைப் புனைவார் இந்நாளில் குறைவு. இசை நுணுக்கங்களை அறிந்து பாடல் இயற்றுவோர் மிகச் சிலரே. சேந்தன் அத்தகைய ஒருவர். இவர் பிள்ளைப் பாடல்கள் பாடி 'சேந்தன் குழந்தைக் கவிகள்' என்ற நூலை வெளியிட்டவர்.

மரபுவழித் தமிழ்க் கல்வியும் சமய நூலுணர்ச்சியும் இக்கவிஞர் பெருமகனுக்கு அணிகள். 'முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் உரையும் பொன்னே போற்றுபவர்' அவர். தேவாரப் பண்ணிசைமணியும் ஆவார்.

நல்லூர் முருகனை நெக்கு நெக்கு நினைப்பவர். மயிலையும் அவன் திருக்கை அயிலையும் தேவியர்தம் ஒயிலையும் பார்த்துப் பரவசம் அடைவார்; பாடுவார்.

தூரத்தே வரும்போது கேட்பது கோயில் மணியோசை. கண்ணில் தெரிவது நல்லூர்க் கோபுரம். இரண்டையும் பாடுகின்றார்.

''நல்லைக் கோபுரம் பாரீர் - அதை
நாடிப் பணிந்து வணங்குவம் வாரீர் !''

''மணியோசை கேட்டாலையா - நெஞ்சு
மகிழ்ச்சியில் துள்ளுதையா !''

'தவமோங்கு கந்தவேள்' என்று சென்னைக் கந்த கோட்டத்தை சிறப்பித்தார் இராமலிங்க சுவாமி. நம் கவிஞர் வாக்கில் நல்லூர் 'ஓங்கும் நல்லையென்று' சிறப்பிக்கப்படுகிறது

''உண்மையான தெய்வம் ஓங்கு நல்லைத் தெய்வம்
கண்ணுதலோன் தந்த கலியுகனாம் தெய்வம் !''

உண்மையான தெய்வம் தமிழ்த் தெய்வமாக விளங்குகிறது.

''தமிழ்த் தெய்வம் நீயல்லவோ - எங்கள்
தலமான நல்லூரை உளமார விரும்பி வந்த''
(தமிழ்த்தெய்வம்)

சித்தர்கள், தாயுமானவர் முதலியோர் மரபையும் கவிஞர் அடியொற்றிச் செல்கிறார். அரிய தத்துவங்களை எளிமையாக - ஆனால் பூடகமாக - சொல்வது சித்தர்கள் வழக்கம்.

''உள்ளத்தில் நீயிருக்க ஊரெல்லாந் தேடுகின்ற
கள்ளமென்று போகுமையா - முருகா
கள்ளமென்று போகுமையா !''

''நல்லையிலே நீயிருக்க நாடெல்லாந் தேடுகின்ற
அல்லலென்று தீருமையா - முருகா
அல்லலென்று தீருமையா !''

என்பன அற்புதமான கண்ணிகள்.

புகழ் பெற்ற முருக பக்தரான அருணகிரியார் கேட்பது, ''பாடும்பணி . எதைப் பாடும்பணி? ''ஆடும்பரி (மயில்), வேல், அணிசேவல் எனப் பாடும் பணி . நம் சேந்தனும் இந்தப் பாடும் பணியையே செய்கிறார்.

விதம் விதமான பாட்டு :-

''ஆடிடும் மாமயில் ஒரு கூத்து - தாளம்
போடிடும் போதெழும் புதுப்பாட்டு !''
- இது ஒன்று

''காலையும் மாலையும் மணி கேட்டுக்
காதலாய்க் கனிந்தெழும் கவிப்பாட்டு !''
- இது மற்றொன்று

''ஆண்டியாய்ப் பழநி செல்லும்போது - உளம்
அழுதெழும் எனக்குளோர் அருட்பாட்டு !''
- இது பிறிதொன்று.

இவ்வாறு தம் பாட்டுத் திறத்தால் பக்தியை வளர்க்கிறார் 'சேந்தன் . முருகன் அழகில், அருட்டிறத்தில், விழாச்சிறப்பில் எல்லாம் நெஞ்சம் அழுந்தி நிற்கும் இவர் முயற்சி பாராட்டுக்குரியது. நல்லைக் குமரன் அருள் இவருக்கு நிச்சயம் உண்டு.

**கவிஞர் சோ. பத்மநாதன்**

***பலாலி ஆசிரிய கலாசாலை***
***உப அதிபர்***
***10. 06. 94***

உ

சிவமயம்

முருகா !

# பதிப்புரை

'ஆறுமுகம் தோன்றும் அழகிய வேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்றும் எழில் தோன்றும் - சீறிவரு
சூரன் முடியை துணித்தோன் திருப்புகழை
பாரில் வழுத்தினோர் பால்'

நல்லைக் கந்தனை நினைத்த மாத்திரத்தே ஞானம் பெறலாம் நலம் பெறலாம். நல்லைக்கந்தன் மீது பக்திகொண்டு 'நல்லை நாற்பது' எனும் பக்திப் பாடல்களைப் பாடிய அன்பர் கார்த்திகேசு அவர்கள் முறுகிய முருகபக்தர். நல்லைக் கந்தவேளை எந்த வேளையும் தவறாமல் தரிசிக்கும் முற்தவம் பெற்றவர். கள்ளமில்லா நல்ல குழந்தையுள்ளம் படைத்தவர். இசைத் தமிழ் இரசனை உடையவர்.

இத்தகைய நல்லைக் கந்தனின் அடியாருடைய தெய்வீகப் பாடல்களை வெளிப்படுத்துவதும், பக்தர்கள் அனைவருக்கும் இப்பாடல்களைக் கிடைக்கச் செய்வதும் நமக்கு நல்லைக்கந்தன் தந்த பெரும்பேறு என மகிழ்கின்றேன்.

இந்நூல் விற்பனையால் வரும் பணம் யாவும் நல்லைக்கந்தனுடைய திருப்பணிக்கே தரப்படும்.

இந்நூலைப் பெற்றுக் கற்பவர், பாடல்களைப் பாடுபவர் அனைவருக்கும் எந்தை கந்தப்பெருமானுடைய கிருபாகடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

'எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே !'

முருகா!

கே. ஆறுமுகம்
சிவபுண்ணியச் செம்மல்

'முருகன் அருட்பிரவாகம்
171/10, நல்லூர் வடக்கு வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

முருகா

# என்னுரை

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஞான சொரூபியாகிய நல்லைக் கந்தனைக் காலை மாலை தவறாது வழிபட்டு வருகிறேன். முருகன் என்றால் அறுமுகச் சிவன் என்பதே எனது எண்ணம்.

சென்ற ஒரு வருடத்துக்கு முன்பு விழிப்படல் நோயினால் அறுவைச் சிகிச்சைக்கு ஆளானேன். அதனால் தொடர்ந்து இருமாதங்கள் ஆலய தர்சனம் செய்ய முடியவில்லை. அக்காலத்தில் படுக்கையில் இருந்தவாறே அவனை நினைந்து பல பாடல்களைப் பாடினேன். அப்பாடல்களை சில அறிஞர்களுக்குக் காட்டினேன். அவர்கள் நூல் வடிவாக்குமாறு என்னைத் தூண்டினார்கள். அதுவும் முருகன் விருப்பென்று நினைந்து நாற்பது பாடல்களை மாத்திரம் எடுத்து நூலாக்கியுள்ளேன்.

இந்நூலின் மூல நாயகன் முருகன். பாடியோன் அவன் நாமத்தைக் கொண்ட கார்த்திகேயன் 'சேந்தன் . இப்பாடல் களைப் படித்துப் பார்த்துச் சரியெனக் கொண்டோன் சரவணப் பூந்தொட்டிலில் தவழ்ந்த முருகன் பெயர் கொண்ட திரு. சோ. பத்மநாதன். அவர்கள் ஒரு பெருங் கவிஞர் ஆவர்.

இப்பாடல்களுக்கு நாற்பது இராகங்கள் அமைத்து, ஒலிப்பதிவு செய்து தந்தவர் வீர வடிவேலேந்திய முருகன் பெயர் தாங்கிய கவிமாமணி திரு. வீரமணி ஐயா அவர்கள். இந்நூலை அச்சேற்றித் தந்தவர் அறுமுகப் பெருமானின் நாமங் கொண்ட சிவபுண்ணியச் செல்வரும் கொடை வள்ளலுமாகிய திரு. க. ஆறுமுகம் அவர்கள். யான் இந்

நூலைச் சமர்ப்பணஞ் செய்வது நல்லை அறங்காவலர் குகத்திரு குமாரதாச மாப்பாண முதலியார் அவர்களுக்கே. எல்லோருடைய பெயர்களும் முருகன் மயமே. இது நல்லை முருகனின் திருவிளையாடல் அல்லவா.

இந்நூலை அழகுமிளிர அச்சிட்டுத் தந்தவர்கள் 'லக்ஷ்மீஹர' என்னும் நாமம் பூண்ட கணனி அச்சமைப் பாளர்கள், கொழும்பு.

இவர்கள் யாவர்க்கும் அடியேன் பணிவான அன்பு வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

'பக்தர் சொன்னவும் பித்தர் சொன்னவும்
பன்னப் பெறுபவோ'

**- கம்பன்**

**சி. கார்த்திகேசு**
(சேந்தன்)

*167/11, கோவில் வீதி*
*நல்லூர்*
*யாழ்ப்பாணம்*

# உள்ளுறை

## கடவுள் வணக்கம்


1. விநாயகர் வணக்கம்
2. சிவன் வணக்கம்
3. சரஸ்வதி வணக்கம்


## கீர்த்தனைகள்


1. நல்லைக் கோபுரம்
2. நேரந் தவறாத பூசை
3. நல்லை மணியோசை
4. கந்தன் கருணை வேண்டும்
5. உண்மையான தெய்வம்
6. முருகனைத் தொழு மனமே
7. காண்பன எல்லாம்
8. கைவிட மாட்டான் I
9. நெஞ்சே நீ பாடு
10. கூவு குயிலே
11. சொல்லு பல்லி
12. தூது சொல்வாய் கிளியே
13. என்ன குறையுண்டு
14. அச்சம் உனக்கொன்றுமே இல்லை
15. தமிழ்த் தெய்வம்
16. அள்ளி உண்டிடலாம்
17. நல்லைக் கந்தனை நாடிடத் தீரும்

18. என்ன குறைதான் உண்டு
19. பிணி தீர வாரீர்
20. நாடு அமைதி பெற
21. அன்புத் தெய்வம்
22. சிந்தனை செய் மனமே
23. தாங்காது துன்பமையா
24. பாடிடும் ஆசையை மறவேன்
25. திருவருளே சரண்
26. கைவிட மாட்டான் II
27. பாடினேன் நானுன்னைப் பலபாட்டு
28. என்ன குறைதான் உனக்குண்டு
29. காணக் கண் கோடி வேண்டும்
30. தங்கரதத்தில் வந்தான்
31. தங்க மயில்மீது வந்தானடி
32. கார்த்திகைத் திருவிழா
33. திருஅருள் தா தா
34. சித்தம் இரங்காதா
35. என்னால் மறப்பதும் உண்டோ
36. ஆண்டு கொள்வாய்
37. வீதியுள்ளே வந்து பாரும்
38. ஆரிடஞ் சொல்லி ஆறுவேன்
39. இன்னமுஞ் சின்னப் பிள்ளை தானோ நீ
40. நல்ல புகலிடம்

**வாழி**

## விநாயகர் வணக்கம்

### வெண்பா

நல்லைக் குமரனுக்கு நான்நாற் பதுபாடல்
சொல்லித் துதிசெயத் தோன்றியதால் - எல்லையில்
மோன முதற்பொருளாம் முக்கண் ஐங்கரநின்
ஞானத் தமிழெனக்குத் தா.

## சிவன் வணக்கம்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

பார்முதற் பூத மாகி பரந்தொளிர் பரத்தின் ஒன்றாம்
வேரென விளைந்த தெய்வ விழுப்பொருள் விளைவே ஆய
சீர்தரு திருநல் லூரான் திருப்புகழ் செழிக்கப் பாட
பார்பதி சமேத னாகும் நிற்பதம் சிந்தை வைப்பாம்.

## சரஸ்வதி வணக்கம்

செந்தமிழ்க்கு வாய்த்த திருநல்லைக் கோயிலுறை
கந்தனுக்குச் செஞ்சொற் கவிபுனைய - சிந்தைநிறை
அன்னை பராசத்தி அம்புஜப் பாதமலர்
சென்னிமிசை வைப்பேன் தெளிந்து.

# நல்லைக் கோபுரம்

இரா : பீம்பிளாஸ் | பல்லவி | தா : ஆதி

நல்லைக் கோபுரம் பாரீர் - அதை
நாடிப் பணிந்து வணங்குவம் வாரீர்
(நல்லை)

அனுபல்லவி

எல்லையில் தத்துவப் பொருளை - அது
ஏந்தி வான்ஓங்கி நிற்பது பாரீர்
(நல்லை)

சரணம்

கோபுரந் தாங்கிகள் தாமெனக் கூறும்
கொள்கையர் போற்சில சிற்பங்கள் பாரீர்
வேதநல் அருமறை கூறும் - உயர்
வித்தகச் சிற்பங்கள் அற்புதம் பாரீர்
(நல்லை)

காலத்தின் அருமையைக் காட்டக் - கடி
காரம் ஒன்றதிற் சுற்றுது பாரீர்
கோலக் குறத்தி குஞ்சரி சமேத
கும்பிடத் தொங்கிடுந் திரையினைப் பாரீர்
(நல்லை)

ஓம்வேல் முருகா என்றே - வணங்க
உச்சியில் ஒளிவிடும் உண்மைநீர் பாரீர்
ஆம்பயன் தர்சனம் செய்யின் - அட்சரம்
ஆறையும் அறுமுகன் கோபுரம் பாரீர்
(நல்லை)

## நேரந் தவறாத பூசை

இரா : செஞ்சுருட்டி தா : ஆதி

நல்லூரான் பூசை தினம்
நாள்நேரந் தப்பா தென்றும்
எல்லோரும் பார்க்க அடி கிளியே
ஏற்றொழுங்கு உண்டாமடி - கிளியே
ஏற்றொழுங்கு உண்டாமடி

நள்விடியல் நாலரைக்கே
நாள்நேரந் தப்பிடாமல்
பள்ளியறைப் பூசையடி - கிளியே
பார்த்துக் களிக்கலாமே - கிளியே
பார்த்துக் களிக்கலாமே

காலை ஐந்து மணியடிக்க
கணபதிதன் பூசை முதலாய்
வேலோனின் பூசைகளும்
விடியுமுன் தொடருமடி - கிளியே
விடியுமுன் தொடருமடி

பாரியநல் மணியினொலி
பத்தடிக்கப் பகலோனாம்
சூரிய பூசையுடன் - கிளியே
தொடருமடி மறுபூசை - கிளியே
தொடருமடி மறுபூசை

காலமுச்சி பன்னிரண்டில்
கந்த னுடன் மற்றவர்க்கும்
சீலமாய்ப் பூசையடி - கிளியே
செய்வாரடி கதவடைக்கக் - கிளியே
செய்வாரடி கதவடைக்க

மாலைமணி நான் கொலிக்க
மறுபடியுந் திரை நீக்கி
காலைபோற் பூசையடி - கிளியே
கண்டு தொழ வாய்க்குமடி - கிளியே
கண்டு தொழ வாய்க்குமடி

ஐந்துமணிக் கெந்த நாளும்
அடியார்கள் கூட்டமெழ
அந்திக் காலப் பூசையடி - கிளியே
அற்புதக் காட்சியடி - கிளியே
அற்புதக் காட்சியடி

இப்பூசை தொடர்ந்துடனே
எங்கள்முரு கேசனவன்
தப்பாமல் முரசொலிக்க - கிளியே
தாம் வீதி வருவானடி - கிளியே
தாம் வீதி வருவானடி

வள்ளல்முரு கேசனுக்கு
வழமையாய் ஐந்தரைமேல்
பள்ளி செல்லும் பூசையடி - கிளியே
பரவச மூட்டுமடி - கிளியே
பரவச மூட்டுமடி

# நல்லை மணியோசை

இரா : நாதநாமக் கிரியா பல்லவி தா : ஆதி

மணியோசை கேட்டாலையா - முருகா
மகிழ்வுறச் செய்யுமையா - நல்லூர்

அநுபல்லவி

பிணிதுயர் தெரியாதையா - அப்போ
பெருகிடும் இன்பமையா (மணி)

சரணம்

சந்நிதி தெரியுமையா - நெஞ்சுள்
தனித்திரை விலகுமையா
மின்னென வேலினொளி - கண்ணுள்
மிளிர்ந்திடச் செய்யுமையா (மணி)

அடுக்கொளித் தீபம் முதல் - காட்டும்
அத்தனை தீப மெல்லாம்
எடுப்பதுந் தெரியுமையா - கேட்கும்
எழும் மணி ஓசையுடன் (மணி)

மூவிரு முகத்தனுக்கும் - அடுத்து
முத்துக் குமரனுக்கும்
மேவிடும் பூசையெல்லாம் - அதன்பின்
மெல்லெனத் தோன்று மையா (மணி)

காவியுடை ஆண்டியுடன் உட்பிர
காரக் கடவுளர்க்கும்
தாவிலாப் பூசை - உள்ளே
தனித்தனி தெரியுமையா (மணி)

# கந்தன் கருணை வேண்டும்

இரா : திலங் பல்லவி தா : ஆதி

கந்தன் கருணை வேண்டும்
வேறென்ன வேண்டும் - நல்லைக் (கந்தன்)

அநுபல்லவி

சந்ததம் அவன்தாள் தொழுதிட வேண்டும்
சஞ்சலம் அற்றுநாம் வாழ்ந்திட வேண்டும்

சரணம்

பந்த பாசப் பற்றற வேண்டும்
பந்தித்த பாழ்வினை பாறிட வேண்டும்
இந்த உலகின் இருட்கெட என்றும்
சிந்தை அவன்கழல் சேவிக்க வேண்டும்

வம்பு தும்பு மறந்திட வேண்டும்
வாது சூது மாண்டிட வேண்டும்
உம்பர் உலக உறுதியே வேண்டும்
ஓதும் அட்சரம் ஆறென வேண்டும்

தெள்ளு சிவஞானந் தேரார்வீடும்
பள்ளம் சேர்க்கும் பதைப்பற வேண்டும்
உள்ளம் களிக்கும் உயிர்த்துணை ஆன
வெள்ளப் பெருக்கில் மூழ்கிட வேண்டும்

# உண்மையான தெய்வம்
# நல்லை மணி ஓசை

இரா : காபி　　　　பல்லவி　　　　தா : ஆதி

உண்மையான தெய்வம் ஓங்கு நல்லைத் தெய்வம்
கண்ணுதவோன் தந்த கலியுகனாம் தெய்வம்
(உண்மை)

நித்த நித்த பூசை நியமந் தப்பாத் தெய்வம்
பக்தர் கோடி கோடியாக பரவு கின்ற தெய்வம்
(உண்மை)

அந்தம் ஆதி இல்லா அனாதி ஆன தெய்வம்
கந்தன் என்றே வணங்கக் கவலை தீர்க்குந் தெய்வம்
(உண்மை)

அஞ்சினோடு ஒன்றும் அதோ முகமாந் தெய்வம்
குஞ்சி யானை தன்னைக் குன்றில் மணந்த தெய்வம்
(உண்மை)

வஞ்சிக் கொடியாம் மானை வனத்தில் வரைந்த தெய்வம்
அஞ்சேல் அஞ்சேல் என்றே தேவர்க் காத்த தெய்வம்
(உண்மை)

மூர்த்தி தலம் உணர்ந்து முறையில் வணங்கு வோர்கள்
சீர்த்தி வாழ்வு செம்மை செழிக்க வைக்குந் தெய்வம்
(உண்மை)

யோகர் சித்தர் ஞானி வந்து பாதந் தேய
தங்கி இருந்தே துறவை வளர்த்து அருளுந் தெய்வம்
(உண்மை)

விண்ணும் மண்ணும் வியக்க விழாக்கள் காணுந் தெய்வம்
பண்ணிற் பாக்கள் பாடி பணிய வாய்த்த தெய்வம்
(உண்மை)

அகதி என்றே அலறி வீழ்வா ருக்கெல்லாம்
தகுதி வாழ்வை அளித்து தாங்கிக் கொள்ளுந் தெய்வம்
(உண்மை)

நித்த நித்தம் வந்தே நிழல் அருமை காண்பார்
பத்த னாக்கித் தன்னை பரவச் செய்யுந் தெய்வம்
(உண்மை)

## முருகனைத் தொழு மனமே

இரா : பெஹக் | பல்லவி | தா : ஆதி

முருகனைத் தொழு மனமே - நல்லை
முருகனைத் தொழு மனமே
(முருக)

அநுபல்லவி

கருணை முகமாறும் கண்மலர் ஈராறும்
கரமொடு வடிவேலும் களிகொள அமர் நல்லை
(முருக)

சரணம்

சரவணத் தடமதிலே தாமரை மலர்களிலே
தவழின வெயிலெனவே தனியறு மதலைகளாய்
அழிபசி மிகஎழவே அறுவரின் முலையமுதை
அவர்தர அகம்மகிழ் அறுமுக வடிவோனே
(முருக)

அந்தணர் மறையொலியும் ஆகமநிறை யொலியும்
அடியவர் தொழும்ஒலியும் அரஹரஎனும் ஒலியும்
மங்கள முரசொலியும் மணியொலி குழலொலியும்
எங்கணும் ஒலியெழவே எழில்நல்லை உறைபவனாம்
(முருக)

## காண்பன எல்லாம்

இரா : கல்யாணி | பல்லவி | தா : ஆதி

காண்பது எல்லாம் கந்தன் கோலமையா - மார்பில்
பூண்பதெல்லாம் திருப்புகழ் ஆரமையா
(கண்)

அநுபல்லவி

மாண்பதெல்லாம் உலகில் அவன் மதிப்பையா - மற்றோர்
வழுத்தல் எல்லாம் அவன் கீர்த்திஐயா

சரணம்

தேங்கு அருள் கந்தன் நல்லையிலே - கூட்டம்
திரளும் ஐயா என்றும் கடல் போலே
தாங்கி அருள்செய அடியாரெலாந் - தினம்
தேங்கும் ஐயா அவன் சந்நிதியில்

(காண்)

நீலம் எழுமே மயிலில் வேலும் எழுமே - ஆடும்
கோலம் எழுமே கருணை குறிப்பும் எழுமே
சீலம் எழுமே அடியார் சேவை எழுமே - யார்க்கும்
தேசும் எழுமே கந்தச் செல்வம் எழுமே

(காண்)

## கைவிட மாட்டான் I

இரா : கானடா | பல்லவி | தா : ஆதி

கைவிட மாட்டான் நல்லையின் கந்தன்
காத்திடுவான் கண்ணாற் உன்னைப் பார்த்திடுவான்

(கைவி)

அநுபல்லவி

மைவிழி மாதர் மருங்கினில் அமர்வான்
மாமயில் ஏறி வேலுடன் வருவான்

(கைவி)

சரணம்

ஆறமர் சடையோன் அனல்விழிக் கனலான்
ஆறெனுங் குழந்தைகள் ஆகித் தாமரை
ஆறெனும் மலர்களில் அமர்ந்திட அம்மை
ஆறையும் அணைக்க வந்தஎன் கந்தன்

(கைவி)

தேவர்கள் இடரைத் தீர்த்திடத் தோன்றினன்
பாவலர் பலர்க்கும் பதமலர் அளித் தவன்
தாவிப் படருந் தனிக்கொடி போல்வார்
கூவி அழைத்தால் கொம்பெனக் குழைவான்

(கைவி)

## நெஞ்சே நீ பாடு

இரா : பாகேஸ்பரி பல்லவி தா :

நெஞ்சே முருகனை நீபாடு - அதனால்
நிச்சயம் பேரின்ப வீடு
(நெஞ்)

அநுபல்லவி

பஞ்சமோ அதனால் உனக்கொன்று மில்லை
பாடிடும் பாடலுக்கே எல்லையும் இல்லை
(நெஞ்)

சரணம்

கருகிடுமே உதிர் சருகென வினையும்
தளிர்விடுமே சித் தானந்த வெள்ளம்
பெருகிடுமே பெருங் கடலெனப் பக்தி
பெறுபயனே அதனால் பேரின்ப முத்தி
(நெஞ்)

அறுமுகம் ஆகிமுன் தவழ்ந்ததும் அவனே
அசுரர்தம் கிளைகெட தடிந்ததும் அவனே
அமரர்கள் அருஞ்சிறை அழித்ததும் அவனே
அழகொழுகும் பசுங் குழவியும் அவனே
(நெஞ்)

## கூவு குயிலே

இரா : ஹம்ஸ்ஸானந்தி பல்லவி தா : ஆதி

கூவு குயிலே புகழ்ந்து கூவு குயிலே
குளிர் நல்லைக் குமரன்வரக் கூவு குயிலே
(கூவு)

அநுபல்லவி

தாவு குயிலே பறந்து தாவு குயிலே
சண்முகன் நாமஞ் சொல்லித் தாவு குயிலே
(கூவு)

சரணம்

மறை ஞானத் தமிழமுதம் ஓதிட நாளும்
சிறையாரும் பைங்கிளிகள் செவிவாய் கேட்டு
நறையாரும் வண்டினங்கள் முரலுஞ் சோலை
முறையாக அமர்ந்திருந்து முருகன் புகழே

(கூவு)

ஆறுசடை அண்ணலவன் தந்த குமரன்
ஆறுமுகம் ஆனபொருள் ஆன முருகன்
ஏறுமயில் வாகனனாய் இலங்கு வேலன்
கூறுபுகழ் நல்லூரெம் பெருமான் என்றே

(கூவு)

பரங்குன்று சீரலைவாய் திரு வேரகம்
பழனிமலை ஆவின்குடி குன்றாடலும்
படைவீடாய் பயின்றருளும் வேலவனே
பதியாம்எம் நல்லைவந் தமர்ந் தானென்றே

(கூவு)

சிவ மோங்கு சீரோங்கு சிற்பரனின்
தவ மோங்கு தமி ழோங்கு தனிப்பெருமை
நவ மோங்கு திருநல்லை நகரோங்கு
நல மோங்கு நல்லூர்வந் தமர்ந்தானென்று

(கூவு)

## சொல்லு பல்லி

இரா : மாண்டு பல்லவி தா : ஆதி

சொல்லு பல்லிநீ சொல்லு பல்லி - என்
சொப்பனத்தி லேனும் வந்து சொல்லு பல்லி

நல்லபலன் கிட்டுமென்று சொல்லு பல்லி - என்
நல்லூரான் வருவானென்று சொல்லு பல்லி

உச்சியிலே வந்திருந்து சொல்லு பல்லி - என்
அச்சம் அழிந்ததென்று சொல்லு பல்லி

தேவர்சிறை தீர்த்தானென்று சொல்லு பல்லி - ஓர்
ஆபத்தும் வாராதென்று சொல்லு பல்லி

சூரசம் மாரன் வரச் சொல்லு பல்லி - என்
பாரமெலாந் தீர்ப்பா னென்று சொல்லு பல்லி

யானை வள்ளி லோலனென்று சொல்லு பல்லி - அவன்
ஞானசக்தி வேலனென்று சொல்லு பல்லி

காவியுடை ஆண்டிவரச் சொல்லு பல்லி
கையிற்றடி கொண்டா னென்று சொல்லு பல்லி

சூட்டு மலர்க் கடம்பன் வரச் சொல்லு பல்லி - என்
பாட்டுவக்குங் கந்தன் வரச் சொல்லு பல்லி

## தூது சொல்வாய் கிளியே

இரா : கல்யாணி — பல்லவி — தா : ஆதி

தூது சொல்வாய் கிளியே நல்லைக் குமரனிடம்
தூது சொல்வாய் - கிளியே

அநுபல்லவி

ஓதுமெய்ஞ்ஞான ஓங்கார மயிலோன்
தீதிலாஎம் செல்வக் குமரனிடம் (தூது)

சரணம்

காதல் மிகக் கொண்டேன்
கண்ணுறக்கந் தானிழந்தேன்
ஓதும் உணர்வொழிந்தேன்
உன் மத்தனாய்ப் போனேன்
யாதுஞ் செயலிழந்தேன்
இணைமலர்த் தாள் நினைந்தே
போது மலரேத்திப் புழுங்குமென் துயர்கூற (தூது)

பாலுங் கசக்குதடி - கிளியே கண்
பஞ்சடைந்து போச்சுதடி
காதுஞ் செவிடாகிக் - கிளியே
கருத்து நிலை தளருதடி
வேலுந் திருக்கரமும் - கிளியே
விளங்கும் மயிலோனை
சாலத் தழுவிடநான் - கிளியே
தவிக்கும் நிலை கூற (தூது)

## என்ன குறையுண்டு

இரா : ஆரபி பல்லவி தா : ஆதி

என்ன குறையுண்டு - மனமே உனக்கு
யாது சொல்லத் தானுண்டு (என்ன)

அநுபல்லவி

முன்னே நல் லூருண்டு மூழ்கித் திளைக்க
என்நேரமும் முருகன் இன்னமுதத் தேனுண்டு (என்ன)

சரணம்

அயில்வேல் ஒன்றுண்டு ஆறு முகங்களுண்டு
மயில்மேல் உலா உண்டு மாதரிரு பாலுமுண்டு
இயல்சேர் எழிலுண்டு ஈராறுகை களுண்டு
வெயில்போல் ஒளியுண்டு விளங்கபய கரமுண்டு
(என்ன)

வாழ்த்த வாயுண்டு வலம்வரக் காலுண்டு
தாழ்த்தச் சிரமுண்டு தலைமிசைக் கரமுண்டு
சூழ்த்த மலருண்டு தோத்திரஞ் சொலவுண்டு
வீழ்த்த வினையுண்டு மேலும் இனியுனக்கு (என்ன)

திருக்குள மொன்றுண்டு தென்பதிப் பழனியுண்டு
மருங்குள சோலையுண்டு வாசத்தேன் மலர்களுண்டு
திருப்பொலி வீதியுண்டு சேனுயர் மதிலுமுண்டு
அருச்சனை பூசையுண்டு அந்தணர்ப் பெருமையுண்டு
(என்ன)

## அச்சம் உனக்கு ஒன்றுமே இல்லை

இரா : தோடி பல்லவி தா : ஆதி

அச்சம் உனக்கு ஒன்றுமே இல்லை - மனமே
அஞ்சாமற் செல்நீ நல்லையின் எல்லை (அச்ச)

அநுபல்லவி

பச்சைமயில் வாகனன் பார்த்தே இருப்பன்
பரவித் துதிசெய்யின் பாறிடுந் துன்பங்கள் (அச்ச)

சரணம்

நச்சும் பவவினைகள் நண்ணாமற் போகும்
நந்நெறி யாவுமே தன்னாலே கூடும்
இச்சைகொள் காமாதி இல்லாமல் தொலையும்
இகபரசௌ பாக்யம் எல்லாமே சேரும் (அச்ச)

கொடுங்கோல் அரசின் கொடுமைகள் தீரும்
கூற்றுவன் கூடஅஞ்சிடக் காண்கும்
படுகொலை பதற்றங்கள் பறையாமற் போகும்
பன்னிரு விழிகளுள் ஒன்றேனுங் காக்கும் (அச்ச)

## தமிழ்த் தெய்வம்

இரா : கல்யாண வசந்தம் பல்லவி தா : ஆதி

தமிழ்த் தெய்வம் நீயல்லவோ - எங்கள்
தலமான நல்லூரரை உளமார விரும்பிவந்த (தமி)

அநுபல்லவி

சங்கரன் நெற்றிக் கண்ணினைக் காட்டியும்
தங்குறை உணராக் கீரனை - காத்தளம் (தமி)

சரணம்

தந்தை அகப்பொருட் கிலக்கணந் தந்திட
சங்கப் புலவோர்பலர் அதற்குரை சாற்றியும்
அந்தக னாய்வந்துநக் கீரனை மெச்சிய
சுந்தரப் பாலனாம் எங்கள் நல்லூர செந் (தமி)

கந்த புராணம்செய் கச்சியப் பரையும்
கலிவெண் பாபொழி கவி குருபரனையும்
சந்தத் திருப்புழைத் தந்த அருணகிரி
சாதனை யாளனையும் காதலித்த செந் (தமிழ்)

## அள்ளி உண்டிடலாம்

இரா : ஸிந்து பைரவி பல்லவி தா : ஆதி

அள்ளி உண்டிடலாம் வாரீர்
ஆனந்தத் தெள்ளமுதை அழகான நல்லூரில்

அநுபல்லவி

சொல்லும் பொருளும் எட்டித்
தொடரவும் முடியா தொன்றை
அல்லும் பகலும் அருந்தி
ஆனந்தம் நிலைபெறவே

சரணம்

அல்லல் அழிந்துவிடும் அருவினை
அகன்று விடும்
தொல்லை வல்வினைத் துன்பந்
தொலைந்து விடும்
வல்ல முரு கேசனை வாழ்த்தி
வணங்கி நின்றே
எல்லை இல்லதோர் இன்பத் தழுந்தித்
திழைத்திடவே
(அள்ளி)

சிற்பர யோகிகள் ஞானிகள் காணொணா
அற்புதமுத்தி அளித்தெமை ஆட்கொளும்
நற்பரன் நல்லை நகரில் அமர்ந்துறை
பொற்பத புண்ணியப் பொருளைப் புணர்ந்து நாம்
(அள்ளி)

## நல்லைக் கந்தனை நாடிடத் தீரும்

இரா : ஹிந்தோளம் பல்லவி தா : ஆதி

நல்லைக் கந்தனை நாடிடத் தீருமே
எல்லை இல்லாத இடரெலாம் என்றுமே
(நல்லை)

அநுபல்லவி

அல்லும் பகலுமே அடியரைக் காக்குமே
வெல்லும் வேலுமோர் முல்லைச் சிரிப்புமே
(நல்லை)

சரணம்

பிச்சை ஏற்றுண்டு பிழைப்பவர் ஆயினும்
கச்சியப்பன் சொல் கவியொன்று காணுமே
அச்சம் வந்துன்னை அலைத்திடும் போதெலாம்
அருணகிரி தந்ததோர் புகழொன்று ஆற்றுமே
(நல்லை)

அமரில் யாம்படும்பேர் அல்லல் அகற்றிட
குமர குருபரன்தன் கூற்றொன்று தடுக்குமே
வீரம் மிக்குயர்வாம் வாகை சூட்டிட
கீரன் ஆற்றுப் படையொன்று உயர்த்துமே
(நல்லை)

## என்ன குறைதான் உண்டு

இரா : தந்நியாசி பல்லவி தா : ஆதி

என்ன குறைதான் உனக் குண்டு
எழில் நல்லூர்க் கந்தா, கடம்பா, முருகா உனக்கு
(என்ன)

அநுபல்லவி

சொல்ல ஒருகுறை இல்லாக் குறையன்றி
நல்லைப் பதியமர்ந்த செல்வக் குமரா இன்னும்
(என்ன)

சரணம்

கோபுர வாயிலுண்டு கொடித்தம்பக் கோலமுண்டு
மூலமாய் வேலுமுண்டு மூர்த்திகள் பலவுமுண்டு
கோலமா மஞ்ஞை யுண்டு குடை கொடி சேவலுண்டு
பாலனாய்க் கருணைபொழி பன்னிரு விழிகளுண்டு
(என்ன)

சித்திரத் தேருமுண்டு சிறந்த சப்பரமுமுண்டு
வித்தக வாகனங்கள் விதவித வகைகளுண்டு
அற்புதக் கோலநீடு அழகுமண் டபங்களுண்டு
நித்திய நைமித்யங்கள் நியமதந் தவறாமலுண்டு
(என்ன)

ஆறுபடை வீடுபோல் அமைந்தபொற் கோயிலுண்டு
ஏறிப் பவனிவர எழிலார்நல் வீதியுண்டு
ஈறிலா இன்பந்தரும் இணைமலர்ப் பாதமுண்டு
கூறுமடியார் தொகை கோடானு கோடியுண்டு
(என்ன)

பக்தர்கள் கூட்டமுண்டு பஜனைக் குழாங்களுண்டு
மத்தள முரசமுண்டு மணியொலி நிரைகளுண்டு
தத்துவ புராண படனமுடன் இன்னும்
எத்தனை யோவெனச் சொலமுடியா நினக்கு
(என்ன)

## பிணிதீர வாரீர்

இரா : வசந்த பல்லவி தா : ஆதி

கருணைக் கடல் பெருகும் வேளை - ஆடிக்
களித்திடலாம் கூடிக் குளித்திடலாம் வாரீர்
(கரு)

அநுபல்லவி

பிறவிப் பெரும்பிணி தீர்க்கும் - எமக்குப்
பேரின்ப நிலையை உண்டாக்கும்
(கரு)

சரணம்

கருவி கரணம் வாய்த்தமை உணர்ந்து
காமாதி போகச் சேற்றைக் கடந்தே
இருவினைப் பயன்தரும் இறுதியை எண்ணி
இடருறா இன்ப வீட்டினிற் சேக

(கரு)

## நாடு அமைதி பெற

பல்லவி தா : ஆதி

நாடு அமைதிபெற வேண்டும் - எனக்
கூடிப் பஜனை செய வாரீர்

(நாடு)

அநுபல்லவி

வாழுந் தமிழினம் இந்த நாட்டில்
வாழ்வு மலரவேண்டும் என்றே

(நாடு)

நல்லூரான் வாசல் அமர்ந்தே - சிறு
நாழிகைப் போதவன் நாமமே பாடில்
பொல்லாத கொடுவினை ஓடும் - நாட்டில்
புண்ணியம் தானே வந்து சேரும்

(நாடு)

தேவரைக் காத்தவன் செவ்வேள் - கொடிய
தீயரைத் தீர்த்தவன் அவனே - எமக்கும்
ஆவதும் பிறிதொன் றாலில்லை - எம்
ஆன்ம உறுதியைக் கொண்டே

(நாடு)

நல்லூரான் நாமத்தைச் சொல்லி - மிக
நம்பி நலிந்துநாம் அவன்கழல் போற்றி
எல்லோரும் ஓலமிட் டழுதால் - இடர்
எரியுண்ட பஞ்சினைப் போலாம்

(நாடு)

## அன்புத் தெய்வம்

இரா : கரகரப் பிரியா பல்லவி தா : ஆதி

அஞ்சலென் எமக்கபயம் அளிக்குந் தெய்வம்
அறிவினுக்குள் அறிவாகி நிற்குந் தெய்வம்

அநுபல்லவி

தஞ்சமென வந்தோரைத் தாங்குந் தெய்வம்
சரவண பவ, னென்னும் நல்லைத் தெய்வம்

சரணம்

நஞ்சணியுங் கண்டனருள் ஞானத் தெய்வம்
நல்லூரில் நடம்பயிலக் காணுந் தெய்வம்
குஞ்சரியாள் யானையுடன் குலவுந் தெய்வம்
குமரகுரு பரனாகக் கொண்ட தெய்வம்

வஞ்சனைபொய் காமாதி மாய்க்குந் தெய்வம்
சஞ்சிதமாம் முன்வினையைத் தகர்க்குந் தெய்வம்
அஞ்சுகனா தியர்பரவ ஆடுந் தெய்வம்
அகத்தியருக் கருள்செய்த அன்புத் தெய்வம்

## சிந்தனை செய் மனமே

இரா : ரஞ்ஜனி பல்லவி தா : ஆதி

சிந்தனை செய் மனமே
திருநல் லூரனைத் தினமே
(சிந்)

அநுபல்லவி

கந்தங் கமழ் நல்லை கடம்பவிழ் மலர்சூடிச்
சுந்தர மா மயில்மேல் தோன்றிடுங் கந்தனை
(சிந்)

சரணம்

வந்த வினை மாற்றி வருபிணி அவைநீக்கி
இந்த உலகில் எழுமாசை அவை நீக்கி
சொந்தங் கொண்டாடுந் துன்ப நிலையகற்றி
அந்தமில் இன்பம் அடைய நல்லூரனை
(சிந்)

இந்திர போகமும் என்றும் நிலைக்காது
மந்திர தந்திர மாயமும் பலிக்காது
முந்திய வினைப்பயன் மூண்டெழும் அதனால்
அந்தமில் இன்பம் அடைய நல்லூரனைச்
(சிந்தனை)

## தாங்காது துன்பமையா

இரா : புன்நாக வராளி தா : ஆதி

ஓங்கார மேடைக்கு ஓடி அலைகின்றேன்
உலகெங்குங் காணேன் ஐயா - முருகா
உலகெஙங்குங் காணேன் ஐயா

தூங்காமல் தூங்குதற்கு துடிதுடித்து அலைகின்றேன்
சுகமொன்றுங் காணேன் ஐயா - முருகா
சுகமொன்றுங் காணேன் ஐயா

ஆங்காரம் அழிவதற்கு அலைந்து திரிகின்றேன்
பாங்கான வழி காணேன் ஐயா - முருகா
பாங்கான வழி காணேன் ஐயா

நீங்காமல் என்னுள் நீயிருக்க அலைகின்றேன்
தாங்கா தென் துன்பம் ஐயா - முருகா
தாங்காது என்துன்பமையா

உள்ளத்துள் நீயிருக்க ஊரெல்லாந் தேடுகிற
கள்ளமென்று போகும் ஐயா - முருகா
கள்ளமென்று போகும் ஐயா

நல்லையில் நீயிருக்க நாடெல்லாந் தேடுகின்றேன்
அல்லலென்று தீருமையா - முருகா
அல்லலென்று தீருமையா

## பாடிடும் ஆசையை மறவேன்

இரா : பல்லவி தா :

பாடிடும் ஆசையை நான் மறவேன்
பக்தியினால் நெஞ்சு உருகி உருகியே
(பாடு)

அநுபல்லவி

ஓடிடும் உலக சஞ்சலம் ஒழிந்துன்றன்
ஓங்கார மயிலையும் வேண்டி அன்பினால்
(பாடிடு)

சரணம்

எழுத்தசை சீர்தொடை யாப்பறியேன்
இலக்கிய மரபே ஏதுமறியேன்
எழுந்திடும் ஆவலினால் உன்னை
என்றென்றும் பாடிட நான் மறவேன்
(பாடிடு)

வேட்கை யாவும் நின்மேலே
விரும்பிப் பாட்டுப் பாடுதலே
மோட்டுக் கவியே ஆனாலும்
முருகா என்றே பாடுவனே
(பாடிடு)

கேட்கும் மற்றப் புலவோர்கள்
கீழ்க்கவி என்றே இகழ்ந்தாலும்
கேட்கும் புலவன் நீயென்னும்
கேண்மையி னாலுனைப் பாடுவனே
(பாடிடு)

## திருவருளே சரண்

இரா : நாட்டைக் குறிஞ்சி பல்லவி தா : ஆதி

திருவருள் சரணெனத் தேடி வந்தேன்
தேவாதி தேவா திருநல்லை வாசா
(திரு)

அநுபல்லவி

பரிபுர முரலெழ பதநடம் பயில்சிவ
பரனருள் அறுமுக சரவண பவநின்
(திரு)

சரணம்

அருள்முக மோராறும் அணிமலர் ஈர்பதமும்
கரமிசை வடிவேலும் கண்மல ரீறாறும்
மருவிய மடமாதர் மருங்கினில் எழில்ஆர
மயில் மிசை ஒயிலாக மனதுறைமுருகேசா
(திரு)

அரஹர ஒலியெழ அடியவர் வலம் வர
அமரரும் அணிமலர் முறைமுறை சொரிதர
குருபரன் எனஉனை கயிலையின் நினைவொடு
தரிசனம் பெறுபவர் தமதிடர் கழையும்நின்
(திரு)

## கைவிட மாட்டான் II

இரா : மதுவந்தி

பல்லவி

தா : ஆதி

கைவிட மாட்டான் திருநல்லை வாசன்
கருணைக் கடலோன் காத்தி கேயன்
(கை)

அநுபல்லவி

ஆயிர கோடி சூர்யப் பிரகாசன்
ஆனந்த ரூபி அருட்பிர காசன்
(கை)

சரணம்

திங்களும் பாம்புங் கங்கையும் சூடும்
செஞ்சடை வேணி தந்தருள் பாலன்
செங்கையில் வேலும் செந்திரு வான
மங்கையர் பாகம் வந்திடும் மயிலோன்
(கை)

நந்த வனம்மயில் நாட்டியம் ஆடிட
கொந்தலர் சோலை கோகிலம் கூவிட
கந்த மலர்மணம் காற்றிற் கலந்திட
சுந்தர சோலைசூழ் தம்பதி கொண்டோன்
(கை)

## பாடினேன் நானுன்னைப் பலபாட்டு

இரா : துவாசந்தி பல்லவி தா : ஆதி

பாடினேன் நானுன்னைப் பலபாட்டு - முருகா
பரவச மாகுவேன் உனைப் பார்த்து
(பாடி)

அநுபல்லவி

ஆடிடும் மாமயில் ஒருகூத்து - தாளம்
போடிடும் போதெழும் புதுப்பாட்டு
(பாடி)

சரணம்

காலையும் மாலையும் மணிகேட்டு - முருகா
காதலாய்க் கனிந்தெழும் கவிப்பாட்டு
வேலொடு வீதியில் வரும்போது - முருகா
மேலெழும் எனக்கொரு வேல்ப் பாட்டு
(பாடி)

முத்துக் குமரனாய் வரும்போது - முருகா
முகிழ்ந்திடும் எனக்கொரு முதற்பாட்டு
மூவிரு முகத்தனாய்க் காண்போது முருகா
மூண்டெழும் தனியொரு முறைப்பாட்டு
(பாடி)

வேலொடு மயிலினில் வரும்போது - முருகா
வீறுகொண் டேயெழும் வெறிப் பாட்டு
ஆண்டியாய்ப் பழனி செலும் போது - உளம்
அழுதெழும் எனக்குளோர் அருட்பாட்டு
(பாடி)

## என்ன குறைதான் உனக்குண்டு

இரா : தன்யாசி　　　　பல்லவி　　　　தா : ஆதி

என்ன குறைதான் உனக்குண்டு - முருகா
எழில் நல்லூர்க் கந்தா உனக்கு

அநுபல்லவி

சொல்ல ஒருகுறை இல்லை என்ற குறையன்றி
நல்லைப் பதியமர்ந்த செல்வக் குமரா இன்னும்
(என்ன)

சரணம்

கோபுரப் பெருமையுண்டு கொடித்தம்பக் கோலமுண்டு
மூலமாய் வேலுண்டு மூர்த்திகள் பலவு முண்டு
கோலமா மஞ்ஞையுண்டு குடைகொடி முரசமுண்டு
பாலனாய்க் கருணைபொழி பன்னிரு விழிகளுண்டு
(என்ன)

சித்திரத் தேருமுண்டு சிறந்தசப் பரமுமுண்டு
அற்புத மண்டபம் ஆலயஞ் சுற்றவுண்டு
வித்தக வாகனாதி விதவித வகைகளுண்டு
நித்திய நைமித்ய பூசை நியமந் தவறாமலுண்டு
(என்ன)

ஆறுபடை வீடுபோல் அமைந்தபொற் கோயிலுண்டு
ஏறிப் பவனிவர எழிலார் வீதியுண்டு
ஈறிலா இன்பந்தரும் இணைமலர்ப் பாதமுண்டு
கூறும் அடியார்கள் தொகை கோடானு கோடியுண்டு
(என்ன)

## காணக் கண்கோடி வேண்டும்

இரா : தேஷ்　　　　பல்லவி　　　　தா :

காணக் கண் கோடி வேண்டும் - நல்லைக்
கந்தன் திருஊர் வந்த போதினில்
(காணக்)

அநுபல்லவி

பூணும் முப்புரி நூலும் பொன்னாபரண மார்பும்
பூம்பட் டுடையரையும் பொன்மேனித் தனியழகும்
(காணக்)

சரணம்

சூரியப் பிரகாச சோதி முடியழகும்
நாரியர் இருமங்கும் நகைசெய் முத்தழகும்
வேரிக் கடம்பழகும் விண்மண் தொழு மழகும்
ஏறிய மயிலழகும் இணை மலர்த் தாளழகும்
(காணக்)

காலிற் கழலழகும் கழுத்து மணியழகும்
வேலின் ஒளியழகும் மெய்வெண் நீற்றழகும்
கோல மயிலழகும் கோழிக் கொடியழகும்
சீலமெய் ஞானத் தேசிக வடிவழகும்
(காணக்)

## தங்கரதத்தில் வந்தான்

இரா : பேகட பல்லவி தா : ஆதி

தங்க ரதத்தில் வந்து தரிசனந் தந்தான்
சங்கரன் தந்த எங்கள் சண்முகக் கந்தன்
(தங்க)

அநுபல்லவி

சிங்கார வேலாய்த் தோன்றித் தேவியர்சூழ
எங்களின் இன்னல் தீர்க்க எழுந்தருளி நன்றே
(தங்க)

சரணம்

மங்கல வாத்தியங்கள் வானெழுந் தார்பரிக்க
மந்திர நாத வெள்ளம் மறையவர் பெருக்கோவென
அங்குள அடியார் வெள்ளம் ஹரஹர என்றரற்ற
சங்கத் தமிழ்ச்சேந்தன் சரவண பவனென
(தங்க)

வடம்பிடித் திழுப்பா ரன்பர் வைத்தகண் வாங்கா திற்பர்
தடம்புரண் டசைவார் சில்லோர் தர்சனம் போதா தென்றே
குடங்குட மாகக் கும்பம் கொட்டுநீர் சரிப்பார் வீதி
கடம்பசை மார்பன் தங்கத் தேருலாக் காண வந்தான்

## தங்க மயில்மீது வந்தானடி

இரா : ஆனந்தபைரவி பல்லவி தா : ஆதி

தங்கமயில் மீது வந்தானடி - கந்தன்
தணியாத காதல் அள்ளித் தந்தானடி - தோழி
(தங்க)

குங்குமத் தோளழகை கண்டேனடி - கூடக்
குஞ்சரி வள்ளி பாகங் கொண்டானடி - தோழி
(குங்கு)

பங்கயக் கண்ணொன்றால் பார்த்தானடி - நெஞ்சில்
பக்திப் பரவசங்கொளச் செய்தானடி - தோழி

செங்கை வேலொன்று கொண்டானடி - அந்தச்
சேவற் கொடியழகும் பார்த்தேனடி - தோழி
(குங்கு)

எங்கும் அவனாய்த் தெரிந்ததடி - அந்த
இன்பத்தை என்னென்று சொல்வேனடி - தோழி
(குங்கு)

அவனே நானென்ன ஆகும்நிலை - சொல்லில்
ஆருக்கும் சொல்லிட முடியாதடி

பழத்தின் சுவையை உண்டாலன்றித் - அதைப்
பார்த்துச் சுவை கூறிட முடியாதடி - தோழி
(குங்கு)

## கார்த்திகைதிரு விழா

இரா : ஆபோகி பல்லவி தா : ஆதி

கார்த்திகை விழாவே பெருவிழா - அன்பர்
கண்டு களிக்கும் திருவிழா

அநுபல்லவி

கீர்த்தி மேவும் நல்லை யூரில் - கார்த்தி
கேயன் உலாவரும் நேரிலே
(கார்த்)

சரணம்

சரவணப் பொய்கை தவழ்ந்த பிள்ளை
தத்துவந் தந்தைக் குரைத்த பிள்ளை
பிரமனைச் சிறையில் இட்ட பிள்ளை - ஔவைப்
பிராட்டிக் கருளிய சின்னப் பிள்ளை
(கார்த்)

## திருவருள் தா தா

இரா : நாதநாமக்கிரியா பல்லவி தா : ஆதி

சிவசிவ சுப்ரமண்யா - செந்தமிழ்த்
திருநல்லை வாசா திருவருள் தா தா
(சிவசிவ)

அநுபல்லவி

தவமுனி வோர்கள் தழுவுபொற் பாதா
சரவண பவகுக சண்முக நாதா
(சிவசிவ)

சரணம்

அம்மை சிவைபாலா ஆறுமுகத் தையா
வெம்மைப் பிணிதீர்க்கும் வேலாயுதக் கையா
இம்மைப் பிறப்பொழித்து இருவாதனை யகற்றி
செம்மை நலம் பெருக திருவருள் தாதா
(சிவசிவ)

## சித்தம் இரங்காதா

இரா : ஹம்சானந்தி

பல்லவி

தா : ஆதி

சித்தம் இரங்காதா எம்ஐயா
திருநல் லூருறை செவ்வேளையா (சித்தம்)

அநுபல்லவி

நித்தம் வந்துன் நிறைகழல் ஏத்தும்
பித்தன் இவனென்னைப் பேணி அணைக்க நின்
(சித்தம்)

சரணம்

எத்தனை கோடி உடலெடுத் திளைத்தேன்
இத்தரை மீது இனிப்பிறப் பெடுத்துச்
செத்திட விரும்பாச் சிறியனுக் கிரங்கி
முத்தி பெறும் வழி முன்நின் றருளச்
(சித்தம்)

கழுகொடு நரியும் காலனுங் களைத்தான்
விழுமிய வேதனும் வெம்துயர் கொள்வான்
தொழுதெழு வேனென் தொலையாப் பிணியால்
அழுதெழும் பிறப்பினை அகற்றிட நினது
(சித்தம்)

## என்னால் மறப்பதும் உண்டோ

இரா : தேஷ்

பல்லவி

தா : ஆதி

உன்னை என்றும் மறப்பதும் உண்டோ - நல்லை
உறையும் முருகா இந்தப் பிறப்பில்
(உன்னை)

அநுபல்லவி

மின்னாம் வாழ்விற் கழிந்ததற் கிரங்கிநின்
பொன்னாம் மலரடி புகும்வழி பெற்றிட
(உன்னை)

சரணம்

இன்று நன்று நாளை நன்றென
பொன்றும் வாழ்வைப் பொருளெனக் கொண்டேன்
என்றும் மீளா இடரினைப் போக்க நின்
பொன்செய் நல்வழி பொருந்தி உய்ந்திட
(உன்னை)

கரும்பென் உள்ளங் கையில் இருந்திட
இரும்பைக் கடித்துப்பல் இழக்கும் ஏழையேன்
பெரும்பயன் பெற்று பெறுபயன் எய்திட
கரும்பெனும் நின்கழல் கண்டு தொழ நான்
(உன்னை)

## ஆண்டு கொள்வாய்

இரா : சகானா பல்லவி தா : ஆதி

அடைக்கலந் தந்தென்னை ஆண்டு கொள்வாய் ஐயா
அருள்பொழி நல்லை ஆறுமா முகவா - ஐயா
(அடைக்கலந்)

அநுபல்லவி

துடைக்கினும் போகேன் சுப்ரமண் யாநின்
துணைமலார் பாதம் சரணெனத் தொடர்வேன்
(அடைக்கலந்)

சரணம்

புழுக்கண உடம்பைப் பொருளெனப் போற்றிப்
பழுத்தமெய் அடியார் பக்கமும் பாரேன்
ஒழிக்குந் துன்பப் புயல்வாய்ச் சுழன்றே
சுழிக்கும் ஆழிச் சுறாவாய்ப் படாமல்
(அடைக்கலந்)

உண்டுண் டுறங்கி ஒழிந்த அதனால்
கண்டுகண் டவமே கழிந்தன காலம்
பண்டுயான் செய்த பாவமோ அறியேன்
வண்டுபண் செய்யும் கொண்டலன் குமரா
(அடைக்கலந்)

## வீதியுள்ளே வந்து பாரும்

இரா : அடானா பல்லவி தா : ஆதி

வீதியுள்ளே வந்து பாரும் - கந்தன்
மேவியுறை நல்லைக் கோயிலினுள்
(வீதியுள்ளே)

அநுபல்லவி

ஓதும் உணர்வுகள் உருவங்கள் ஆக்கி
ஓவியன் சிவப்பிர காசன் சுவரில் தீட்டிய

சரணம்

ஆறுசடை அப்பனின் ஐந்தொழில் ஆட்டமும்
கூறுசிவ நர்த்தனக் கோலம் நூற்றெட்டும்
ஆறுபடை வீடமர் அழகன் பதிகளும்
வேறுபல தெய்வ உருவங்கள் அமைப்பும்
(வீதியுள்ளே)

## ஆரிடஞ் சொல்லி ஆறுவேன்

இரா : அமிர்தவர்ஷனி பல்லவி தா : ஆதி

ஆரிடம் என்துயர் சொல்லி ஆறுவேன் - அருள்
சீருடன் பொலியுந் திருநல் லூராநான்
(ஆரிடம்)

அநுபல்லவி

பாரினில் படுதுயர் பட்டது போதுமையா - கொடும்
பாவியேன் நின்பதம் பற்றல் அல்லாலினி
(ஆரிடம்)

சரணம்

ஆணவ இருளில் அமிழ்ந்தி திளைத்ததால்
காணுமவ் வின்பங் கானல்நீர் ஆனதே
வீணனாம் எனக்கினி விடுதலை காணநான்
நாணியே நின்பதம் நாடுவ தல்லால்
(ஆரிடம்)

பொய்யெனும் மாயா வலையினுள் மயங்கால்
மெய்யென வீழும் விட்டிலே போல
ஐயனே வீழ்ந்து அழிந்திடும் முன்னே
கைதந் தென்னைக் காத்திட உலகில்
(ஆரிடம்)

## இன்னமுஞ் சின்னப் பிள்ளை தானோ நீ

இரா : பெஹாக் பல்லவி தா : ஆதி

இன்னமுஞ் சின்னப் பிள்ளை தானோ - முருகா
எனக்கருள் செய்யத் தயக்கம் ஏனோ
(இன்னமும்)

அநுபல்லவி

அன்னை நின்கன்னம் கிள்ளிக் - கண்ணில்
அஞ்சனந் தீட்டி முத்தஞ் சொரியும்
(இன்னமும்)

சரணம்

சென்னியிற் பொன்முடியும் திருக்கை வேலும்
பன்னிரு தோள்களும் பச்சை மயில்மேல்
அன்னமும் மஞ்ஞையும் அருகரு கிருக்க
நன்நகர் நல்லையின் நாயகம் ஆனநீ
(இன்னமும்)

மாரனின் அம்பேர் காரண மாகச்
சூரனைத் தொலைக்கத் தோன்றிய வீரா
நாரணன் மருகா நல்லைநற் பதியா
ஆரணம் உணர்த்திய ஐயனா நீயும்
(இன்னமும்)

## நல்ல புகலிடம்

இரா : பல்லவி தா :

நல்ல புகலிடம் நமக்குக் கிடைத்ததையா
நாளும் நல்லூரரை நாடி வணங்கிட
(நல்ல)

அநுபல்லவி

சொல்லு துயர்கெட தொல்வினை தொலைந்திட
எல்லையில் இன்ப இனிமை தளிர்த்திட
(நல்ல)

சரணம்

நெஞ்சம் தீவினை நினைப்பறத் தீய
வஞ்சம் பொறாமை வந்தணு காதிட
அஞ்ச அபாயம் ஒன்றில்லை என்றிட
குஞ்சரி வள்ளி குமரனைக் கும்பிட
(நல்ல)

## வாழி

அண்ணல்முரு கேசனிரு சரணம் வாழி
அவன்திருக்கை வேல்வாழி மயிலும் வாழி
கன்னியராம் வள்ளிதெய்வ யானை வாழி
கருதுமடிய வர்இதயம் களித்து வாழி
புண்ணியநல் லூரென்றும் பொலிந்து வாழி
பூசைமுறை வழுவாஅந் தணர்கள் வாழி
இன்னிசைப்பா நாற்பதையும் இசைப்போர் வாழி
இருசெவியும் ஆரஇந்நூல் கேட்போர் வாழி

சுபம்